



உ

சிவமயம்

யாழ்ப்பாணத்து

அச்சுவேலிப்பதியிற்

பரம்பரைச் சைவவேளாளகுலதிலகராய் விளங்கிய

மகா-ா-ா-ஸ்ரீமான்.

முருகேசவுடையாரவர்களின் பௌத்திரரும்,

ஸ்ரீமான். சின்னத்தம்பி நொத்தாரிசு அவர்களின்

புத்திரரும்,

கந்தவனாலய ஆதீனகர்த்தரும் ஆகிய

ஸ்ரீமான்.

# ஸ்ரீக்கம் சி. செல்லையாபிள்ளை

அவர்களின்

# தேகவியோகத்தைக் குறித்த

# கவிகள்.

கலாநிதியந் திரசாலை

பருத்தித்துறை.

1951.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்.

# நவாலியூர்

## ஸ்ரீமத். க. சோமசுந்தரப் புலவர் அவர்கள்

### சொல்லியவை.

வெண்பா.

ஆண்டு விகிர்தி மகரமிரு பத்தொன்பான்
பூண்டபங்கு ரேவதியே பூர்வமைந்து—வேண்டும்
அறிவாரீ சானசிவ னையனருள் பெற்றுத்
திருமேனி நீங்குந் தினம். (க)

மன்னும் விகிர்தி மகரமிரு பத்தொன்பான்
பன்னுபங்கு ரேவதிமுற் பஞ்சமியே—துன்னுபுகழ்
திக்கத்துச் செல்லையா வென்னுமீ சானசிவன்
நக்கனருள் பெற்றுயர்ந்த நாள். (உ)

கந்த வனத்துக் கடவுள் திருவடிகள்
சந்ததமு மெண்ணுந் தவமுடையான்—முந்துசிவன்
பொன்னடிகள் போற்றிவரும் புண்ணியத்தான் ஈசானன்
மன்னும் பிறப்பறுத்தான் வாழ்ந்து. (ங)

எல்லாங் கழற்றி யிறைவனடி கலக்க
வல்லான் சிவயோகன் மாணடிகள்—அல்லும்
பகலும் பரவுகின்ற பாக்கியவா னென்றே
புகலு முலகம் புகழ்ந்து. (ச)

கலி வெண்பா.

அன்பரு ளீகை யடக்க மறிவுடைமை
என்பன வெல்லா மியைந்துடையான்—மன்புவியில்
செங்கமலை யென்னத் திகழு மிராசமுத்து
மங்கைநல் லாளை மணந்தருளித்—தங்குபுகழ்ப்
பன்னகபூஷணியைப் பார்ப்பதியைப் பல்கலைசேர்
அண்ணு மலைக்கழக மங்குசென்று—மன்னுபுகழ்ச்
சங்கீத வித்தை தனில்விருது பெற்றுவரும்
பைந்தொடியாள் பொன்னம்மைப் பாவைதனை—இங்கிதமார்
பாகார் கனிமொழியாள் பாடுங் குணமுடையாள்
யோகாம்பி கையென்னு முத்தமியைத்—தோகை
சிவயோக நாயகியைச் செல்விகளாய்ப் பெற்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவயோகஞ் சேரா வறிஞன்—தவயோகன்
அன்புற்ற செல்வன் அரியயோ கீந்திரன்
பொன்பெற்ற செல்வப் புதல்வனாய்—மன்பெற்ற
பூதலத்துப் பெற்றெடுத்த புண்ணியவான் போற்றியென்னும்
ஆதாக்துக் கந்தவன நாதன்—தீகற்றும்
பொற்று மரைத்தாள்கள் புக்குப் புகலடைந்தான்
வற்ருத ஞான வளம். (ரு)

கலித்துறை.

திருவாருந் தென்னிங் காபுரிக் கன்னி சிரமெனவே
ஒருவா துரைக்கு மியாழ்ப்பாண நாட்டு ஒருபுடையே
தருவாருஞ் சூதம் பலவு கதலி தழைத்திருக்கும்
மருவாருந் தண்டலை சூழ்அச்சு வேலி பழம்பதியே. (சு)

மற்றைப் பதியினிற் சைவவே ளாளர் மரபினிலே
கொற்றத் தொடுகுல வுஞ்சின்னத் தம்பி குரிசில்வந்து
கற்றைக் கருங்குழல் வள்ளியம் மைப்பெயர்க் காரிகையைப்
பெற்றுத் திருமணஞ் செய்தில் லறத்திற் பிறங்கினனே. (எ)

போற்றுநற் பொன்னைய பிள்ளையை முன்வரு புத்திரனாய்ச்
சாற்று மிராசப்ப பிள்ளையைப் பின்வரு தம்பியராய்
வேற்றடங் கட்டங்க முத்துவை வேண்டுஞ் சகோதரியாய்
மாற்றுயர் பொன்னென வந்துதித் தானிந்த மன்னவனே. (அ)

ஐயாண் டதனில் மணியேடு கைக்கொண் டருந்தமிழும்
பொய்யாத ஆங்கில பாடையுங் கற்றுப் புலவர்புகழ்
மெய்யாண்ட வேல்மயில் வாகனம் பால்விரும் புந்தமிழ்நூல்
கையாண்டு பல்லாண்டு கற்றுப் புலமை கதித்தனனே. (கூ)

சாற்று முயர்சைவ நன்னெறி நின்றுமெய்ச் சாத்திரங்கள்
போற்றும் புலவர்கள் பாலோதி தன்னறி போதமுற்று
மாற்றல னாகிய சூரனைக் கொன்று மணவனஞ்சேர்
வேற்றனி நாயகன் சேவடி போற்றி விளங்கினனே. (கூ)

அந்நாளி ராசமுத் தென்றே யுரைசெய் யருந்ததியைப்
பொன்னார் மணிமன்ற லாற்றி உயரில் லறம்புகுந்தே
மின்னார் துடியிடை பெண்களொ ரைவர் மிகுந்தபுகழ்
மன்னாரும் யோகீந் திரனையும் பெற்று மகிழ்ந்தனனே. (கக)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீரார் பருத்தித் துறைமது பாலனஞ் சேர்விகிதர்
பேரார் குமார சுவாமியைப் பேசும் மருமகனுய்
பாரா ருலகினிற் பெற்றிடு மாபெரும் பாக்கியவான்
எராருந் திக்கத்துச் செல்லைய வேளா மிறையவனே. (கஉ)

வந்து புகுந்த வடியவர் யாரும் மனம்மகிழக்
கந்த வனத்துக்கடவு ளருச்சனை காட்டி வைப்பான்
சிந்தை மகிழச் சிவார்ச்சனை செய்யு மீசானசிவன்
அந்தமிலா நண்பன் மற்றெனக் கென்று மறைகுவரே. (கங)

மன்னுங் கொழும்பு நகரிலுரி லேநல் வழக்கறிஞன்
என்னுங் குரிசில் நமச்சிவா யப்பெய ரேந்தறனைத்
தன்னன் புடைய பெருமக னுய்வரத் தானடைந்தான்
பின்னும் பெருமக்கள் வேறு முடைய பெரியவனே. (கச)

தகவுறு சைவசித் தாந்தமெய் நூல்களின் சாரங்கொண்ட
துகளறு போதத்துக் கோருரை செய்தருள் தொல்லறிஞன்
இகபரங் காட்டி யருள்யோக நாத னிணையடிகள்
சிகையுறக் கொண்டவன் ஞெண்டாற்று முண்மைச் சிவதொண்டனே. ()

காரெங்கு மோங்கிடு வண்டலை தண்டலை கந்தவனப்
பேரெங்கு மோங்கிடச் செய்பணி யாற்றிடும் பீடுடையோன்
சீரெங்கு மோங்கச் செழித்து வளர்ந்து திகழுகின்ற
ஊரெங்கு மோங்கிடு சுற்ற முடையந லுத்தமனே. (கரு)

வெறியார் கடம்பணி வைவேல் விசாகன் மிகுபுகழே
குறியாகக் கொண்டு பலதொண்டு மாற்றிக் குலவுமின்ப
நெறியா ரருள்நிலை நின்று நிறைந்துநில் லாவுலகில்
பொறியாரும் பொய்யுடல் விட்டடைந் தானவன்பொன்னடியே.

தொழுவார்க் கிரங்கி யருளும் முருகன் ஞெழும்புமுற்றும்
வழுவாமற் செய்ய விரத்தின மைத்துனன் மாட்டிறக்கித்
தெளிவார்கள் சிந்தையிற் சேரும் பரமன் றிருவடிகள்
பொழிவார் அமுதம் அருந்தி யடைந்தனன் பூரணமே. (கஅ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோவை சேக்கிழார் நிலையம்

சிவக்கவிமணி உயர் சைவத்திருவாளர்

## C. K. சுப்பிரமணியமுதலியார் B. A. அவர்கள் எழுதிய

இரங்கற்பாக்கள்.

திக்கஞ்செல் லையா சிவனடிசேர்ந் தாரென்னும்
துக்கச்சொல் கேட்டுத் துளங்கினேன்—மிக்கதோர்
சைவப் பெரியான் தமிழ்ப்பெரியான் சால்புடையான்
மெய்வைத்த சான்றோன் மிக! (௧)

அன்னான் பிரிவால் அலமந்தேன் முன்காலம்
பன்னா ளுடன்பயின்ற பண்பினால்—என்னே
சிவன்கருணை தானிருந்த செய்வினைதா னந்தோ!
எவனுலக நிலையாமை யே! (௨)

கந்தனடி பேணுங் கருத்துடையாய்! நண்புடையாய்!
செந்தமிழின் சைவச்சீர்ச் செல்லையா!—சொந்தமாய்
எப்போது மின்சொல் வியம்புமியல் அன்பதனை
எப்போது காண்போ மியாம்? (௩)

செல்லையா என்னும்பேர்ச் சைவச் சிகாமணியே!
கல்லையார் நெஞ்சுங் கனிவுபெறும்—சொல்லையார்
நற்குணனே நின்னுயிர்தான் நம்பெருமான் றாளிணைக்கீழ்
நிற்கவெந் நாளும் நிலைத்து. (௪)

செல்லையா வின்மனையார் செல்வமகர் சுற்றநண்பர்
எல்லவர்க்கும் என்றன் அனுதாபம்—நல்லவருள்
ஆறு தலையுடைய அம்மான் திருவருளால்
ஆறு தலையடைவோ மாம். (௫)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org